[1978 மார்ச் 18

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) வாரன்சாலை ஏற்கெனவே இருந்து வருகிறது. அதிலிருந்து மேற்கு திசையில் செல்லும் வேறு ஒரு சாலை அமைக்கும் பொறுப்பு சாலையையொட்டியுள்ள நில சொந்தக்காரர்களைச் சேர்ந்தது.

குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம்

*வினா 615—திரு. ஈஸ்வரமூர்த்தி. பி. என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்தின் தலைமையக அலுவலகம் இடம் மாற்றியதால் வாடகை அதிகமாகக் கொடுக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், முன்பு கொடுத்த வாடகைக்கும் தற்பொழுது கொடுக்கப்பட்டு வரும் வாடகைக்கும் எவ்வளவு வித்தியாசம்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—

(அ) ஆம்.

(ஆ) மாதம் ஒன்றுக்கு அதிகப்படியாகக் கொடுக்கப்படும் வாடகை ரூ. 30,621.75.

திரு. ஈஸ்வரமூர்த்தி. பி. என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த வாடகையிலிருந்து இவ்வளவு அதிகப்படியாக வாடகை கொடுத்து இதில் குடியேற வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலும் இருந்து வந்த அலுவலகங்களை 16—2—1977ஆம் நாளன்று, ஒரே இடத்திற்குக் கொண்டு வந்ததின் மூலமாக, வாரிய தலைமை அலுவலகம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், இருப்பு தணிக்கை கோட்ட செயல் பொறியாளர் அலுவலகம் இவையெல்லாம் ஒரே இடத்தில் வந்ததின் காரணமாக அதிகமாக வாடகை கொடுத்தாலும், மீதம் அதிகமாயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 18]

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்த அலுவலகமானது எந்த இடத்தில் இருக்கிறது? இதற்கு முன்பு இருந்தபோது எவ்வளவு வாடகை கொடுக்கப்பட்டு வந்தது? இப்போது அதிகமாக வாடகை கொடுக்க வேண்டிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அலுவலகம் சென்னை அண்ணாசாலையில், 160 எண் உள்ள கட்டிடத்தில் இருக்கிறது. பச்சையப்பா அறக் கட்டளைக்குச் சொந்தமான இக் கட்டிடத்தின் 5, 6 மாடிகளில் அலுவலகம் இயங்கி வருகிறது.

திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய அரசாங்கத்தில் இப்படிப்பட்ட கட்டடங்கள் வாடகை கட்டடங்களில் இருந்தால், அதை மாற்றி அரசுக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டி அவற்றைக் கொண்டு வருவது என்று திட்டமிடப்பட்டிருந்தது. அந்த முறையில் சீக்கிரமாக இதற்கும் சொந்தமாகக் கட்டடம் கட்டி இப்போது வாடகைக் கட்டடத்தில் நடைபெற்று வருகின்ற இதையும் மாற்றுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கட்டடத்தை மாற்றியதன் காரணமாக லாபம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், அரசாங்க அலுவல்கள் தனியாருக்குச் சொந்தமான வீடுகளில் எவ்வளவு நடைபெறுகின்றன என்கின்ற புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கெல்லாம் வாடகை கட்டடத்தில் அதாவது தனியாருக்குச் சொந்தமான இடங்களில் அரசு அலுவலகம் நடைபெற்று வருகிறதோ அவைகளை மாற்ற வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆனால் அது நீண்ட நாள் திட்டம் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

திருப்பூரில் குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா 616—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்க இரண்டாம் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து நகராட்சி மன்றம் அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS